பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 11 | புதன்கிழமை | 24.04.2024 | அதிர்வு 267

## இன்று இலங்கை வருகின்றார் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம்



உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத் தை மக்கள் பாவனைக்கான கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஈரான் ஜனாதிபதி 06▶

## புலம்பெயர் தமிழ் வர்த்தகர்களிடம் சுமந்திரன் பகிரங்கக் கோரிக்கை

# அரசியலிலிருந்து விலகி இருங்கள்!

### உங்கள் ‘பண டீல்’ விடிவுக்கான பயணத்தில் பாரிய பின்னடைவுகளை இங்கு ஏற்படுத்தும்

“தயவு செய்து தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து விலகி இருங்கள் என்று புலம்பெயர்தமிழ்வர்த்தகர்களிடம்கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள்செய்யும்வர்த்தகமும்,உங்களுடையஇலாபம்ஈட்டும்வேலையும் வேறு வழிகளில் இருக்கட்டும். தமிழ்த் தேசிய அரசியலுக்குள் தயவு செய்து நுழையாதீர்கள். தமிழ் மக்களின் விடிவுக்கான பயணத்தை அரசியல் பாதையூடாக நாங்கள் முன்னெடுக்கின்றபோது அதற்குள் பணம் உட்செலுத்தப்பட்டால் அது பாரிய மோசமான பின்னடைவுகளை எங்கள் மக்களிடத்தில் கொண்டுவந்து சேர்க்கும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். 06▶



## நாமலுக்குக் கிடைத்த பதவியால் கடும் அதிருப்தியில் பஸில் – சமல்



மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளமையால் பஸில் ராஜபக்ஷவும் சமல் ராஜபக்ஷவும் கடும் அதிருப்தி 06▶



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் நாட்டின் நிதி அமைச்சரும் கூட.

அரசியல் ‘கள்ள உறவு’ மூலம் ஜனாதிபதியிடம் இருந்து தாங்கள் விரும்பிய திட்டங்களுக்கு சத்தம் சந்தடியின்றி தலா 5 கோடி ரூபாவுக்கு மேல் நிதி ஒதுக்கீடுகளை பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஆறு எம்.பிக்களுக்கு எதிராக அந்தக் கட்சிக்குள் நெருப்பெடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஹர்ஷா டி சில்வா ஐந்து கோடி இரண்டு லட்சம் ரூபா, அஜித் மன்னம்பெரும 4 கோடி 99 லட்சம் ரூபா, காவிந்து ஜெயவர்த்தன ஆறு கோடி 90 லட்சம் ரூபா, பௌஸி 8 கோடி 16 லட்சம் ரூபா, இஷாக் ரஹ்மான் 10 கோடி ரூபா ஒதுக்கீடுகளைப் 06▶

# மலையக மக்களை இலங்கையின் அர்த்தமுள்ள குடிகளாக்கும் பொறுப்பு பிரிட்டனுக்கு உண்டு!

## உயர்ஸ்தானிகரைச் சந்தித்த திலகர் வலியுறுத்து



"இரு நூறு வருடங்களாக இலங்கையில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படும் மலையகத் தமிழ் மக்களை, இலங்கையின் அர்த்தமுள்ள குடிகளாக்குவதில் பிரித்தானியாவும் பங்களிப்புச் செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில், இன்று மலையகம் அடைந்திருக்கும் 200 ஆண்டுகளின் ஆரம்பப் புள்ளி நீங்களே." – என்று இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தியதாக மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பட்ரிக்கும் மலையக அரசியல் அரங்கத்துக்கும் இடையேயான சந்திப்பு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பற்றது. உயர்ஸ்தானிகரின் அழைப்பின் பேரில் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜா, செயலாளர் நா.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து மலையக அரசியல் அரங்கம் அனுப்பி இருக்கும் ஊடக அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மலையகத் தமிழ் மக்கள், இலங்கையில் தமது 200 ஆண்டு நிறைவை அனுஷ்டிக்கும் இந்தக் கால கட்டத்தில் பிரித்தானியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவராகிய நீங்கள் உங்களது இல்லத்துக்கு எம்மை அழைத்தமை வரவேற்கத்தக்கது. ஏனெனில் 200 ஆண்டுகால இலங்கை வாழ்வைத் தொடக்கி வைத்தவர்கள் நீங்களே.

நீங்கள் எங்களை அழைத்து வந்த நோக்கம் பொருளாதார அடிப்படையிலானது என்ற போதும், இங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன்னதாகவே எங்களை அரசியல் சமூகமாக ஏற்று அங்கீகரித்து இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கியதை நன்றியுடன் நினைவுகூருகின்றோம். எனினும், இலங்கை சுதந்திரம் அடைந்ததோடு எங்களது இலங்கைப் பிரஜாவுரிமையை எங்களது சுதேச அரசாங்கம் அதனைப் பறித்து என்பதையும் வருத்தத்துடன் நினைவு படுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

இலங்கைக் குடியுரிமைப் பறிப்புக்கு முன்னதான ஐந்து ஆண்டுகளிலேயே இலங்கையர் எல்லோருக்கும் வழங்கிய இலவசக் கல்வி வாய்ப்பையும் எங்களுக்கு மறுத்தது. இன்று வரை சுகாதாரம், குடிநீர், பாதை, காணி, வீடு, முகவரி என இன்னோரன்ன அடிப்படை உரிமைகள் அரச பொறிமுறையில் வழங்கப்படாது மறுக்கப்பட்ட வர்க்கமாக, பெருந்தோட்ட முறைமையை ஒளித்துக் கட்டும் நிகழ்ச்சி நிரலுடன் மலையக மக்களைச் சிதறடிக்கப்பட்ட சமூகமாக அலைய விடும் ஐம்பதாண்டு காலத்திட்டத்தின் அரைவாசிக் காலத்தை அரசு எட்டிவிட்ட நிலையிலேயே மக்களாகிய நாங்கள் 200 ஆண்டுகளை அனுஷ்டிக்கின்றார்கள். அதனை ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு விதமாக நினைவுகூர்ந்தார்கள். சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த நிலைமையைக் கொண்டாடவும் செய்தார்கள்.

எமது மலையக அரசியல் அரங்கம் இந்த 200 ஆண்டு கால போராட்ட வாழ்வின் அடிப்படையில் அடுத்த 100 ஆண்டுகளுக்கான அத்திவாரத்தை எவ்வாறு இடுவது? எமக்கு மறுக்கப்பட்ட அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை ஒன்றை அரசியல் அணுகுமுறையாக எவ்வாறு அணுகுவது எனும் உரையாடல் வெளியை அரங்கத்தின் ஊடே உருவாக்கினோம் . 24 தலைப்புகளில் இரண்டு ஆண்டுகளாக எங்களது ஆய்வாளர்களைக் கொண்டே ஆய்வு செய்து ஆவணமாக்கியுள்ளோம். இனி அவற்றை அரச கொளாகை வகுப்பாளர்களுக்குக் கொண்டு சேர்க்கும் வழிமுறைகளை ஆராய்ந்து வருகின்றோம்.

இலங்கையில் எங்களது இன்றைய நிலைமைக்கு இலங்கை அரசு மாத்திரம் இன்றி இந்திய, பிரித்தானிய அரசுகளும் வகை கூற வேண்டும் என நாங்கள் எண்ணுகின்றோம். ஆனால், இந்த இரண்டு அரசாங்கங்களும் கட்புலனாகும் கட்டுமான அபிவிருத்திக்குக் காட்டும் ஆர்வத்தை கல்வி சார்ந்து காட்டுவதாக எங்களுக்குத் தெரியவில்லை. இலங்கையால் இலவசக் கல்வி மறுக்கப்பட்ட நாற்பதாண்டு காலத்தை நாங்கள் எட்டிப்பிடிக்க வேண்டி இருக்கின்றது. அந்த இடைவெளியை வேகமாக நிரப்ப சிறப்பு ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. இலங்கை அரசிடம் அப்படி ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. சிடா, ஜிடிஇசட் போன்ற திட்டங்களையே அவை கணக்கில் வைத்துள்ளன. எனவே, இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் எங்களது கல்விக்கு எவ்வாறு உதவலாம் ன்பதை நாங்கள் நல்லதொரு முன்மொழிவாகத் தயார் செய்துள்ளோம். இந்த முனமொழிவின் ஊடாக குறித்த கால எல்லையில் மலையக சமூகத்தில் கலாநிதிகளை, முதுமாணிகளை, பட்டதாரிகளை, கணித விஞ்ஞான ஆசிரியர்களை உருவாக்க முடியும். இதன் மூலம் திட்ட காலத்தின் பின்னதாக எமது சமூகத்தில் அதனை நிலைபெறச் செய்ய முடியும். அதற்கான பொறுப்பை சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மலையக மக்களின் சுகாதார விருத்தி சார்ந்து பிரித்தானிய அரசின் அபிவிருத்தி முகவரான ஜனநாயகத்துக்கான வெஸ்ட்மினிஸ்ட்டர் மன்றம் எடுக்கும் முன்முயற்சிகளுக்கு நன்றியும் பாராட்டுகளும். ஆனால், அவை அரசின் சுகாதாரக் கொள்கையுடன் இணைந்து செல்கின்றதா என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியம். எனது நாடாளுமன்ற காலத்தில் சுகாதார மேற்பார்வைக் குழுத் தலைவராகச் செயற்பட்டு முழுமையான உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை இலங்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து விட்டு வந்தேன். அதில் தொடர்புடைய ஐந்து அமைச்சுக்களின் எழுத்துமூல உடன்பாட்டை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளேன். அதனை உள்வாங்கிக்கொள்வது தோட்ட சுகாதார முறையை அரச சுகாதார முறையைக்குள் கொண்டு வருவதற்கான அடிப்படையைக் கொடுக்கும்.

எது எவ்வாறெனினும் மலையக மக்களை காணி உரிமையற்ற மக்களாகவே 200 வருடங்கள் வைத்து இருக்கும் இலங்கை அரசு 225 – 250 ஆண்டு காலம் இவ்வாறே இழுத்துச் சென்று விடுமானால் இந்தச் சமூகம் சிதறுண்ட சமூகமாக, இன அடையாளம் இழந்த சமூகமாக மாற்றப்படும் அபாயமே உள்ளது. எனவேதான் தெற்கே சிங்கள மக்களைப் போல் மலையகப் பெருந்தோட்ட மக்களையும் சிறு தோட்ட உடமையாளர்களாகும் முதன்மைக் குறிக்கோளுடன் மலையக அரசியல் அரங்கத்தின் அரசியல் நகர்வுகளை முனவைக்கின்றோம். அதுவரை நாங்கள் இந்த நாட்டில் பேப்பரில் கொடுக்கப்பட்ட வாக்களிக்கும் உரிமை மட்டும் பெற்ற மக்களாகவே வாழவைக்கப்படுவோம்.

தற்போது அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உறுமய காணி வழங்கலில் இது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. காணி உரிமையை முழுமையாகப் பெற்றுக்கொள்ளும்போதே மலையகத் தமிழ் மக்கள் இலங்கையில் அர்த்தமுள்ள பிரஜை எனும் அந்தஸ்த்தைப் பெறுவர். அதற்காகவே நாங்கள் போராடுகின்றோம். அதற்கு எங்களை இந்த நாட்டுக்கு அழைத்து வந்த பிரித்தானியாவுக்கும் பொறுப்பு இருக்கின்றது. அதனை நிறைவேற்றுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்." – என்றுள்ளது.

# சு.க. பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமைக்கு அங்கஜன் வரவேற்பு!

சு.க. பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷ
நியமிக்கப்பட்டமைக்கு அங்கஜன் வரவேற்பு!



(த.சுபேசன்)

சுமார் 75 வருட கால பாரம்பரியத்தைக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளமை மிகச்சிறந்த ஜனநாயக செயற்பாடு என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷ்ச் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தனது ஊடாக அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சுதந்திரக் கட்சி பல அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களை உருவாக்கிய கட்சி. அந்த வகையில்தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தனது ஆட்சிக்காலத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்றியிருந்தார்.

விவசாய மற்றும் பாமர மக்களைப் பெரிதும் மதித்தார்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய தலைவராக இருப்பதற்கு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

அதன்பின்னர் எமது கட்சி தொடர்பாக பல வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தாலும் கூட இன்று ஜனநாயக முறைப்படி பொருத்தமான ஒருவர் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதில் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பரந்துபட்ட ஆளுமை கொண்டவர்.

கட்சியினுடைய நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டது. அத்துடன் அவர் பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டதைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் அறிவிக்க கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீதும், அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன மீதும் அண்மைக் காலமாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இந்தப் பதில் தலைவர் பதவி அமையப்பெற்றுள்ளது. இது ஓர் திருப்பு முனையாகவே அமையும்.

எனவே பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள விஜயதாஸ ராஜபக்ஷவை வரவேற்றுக் கொண்டு அவருக்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக உள்ளேன்.

அமைச்சர் விஜயதாஸ வடக்கு மக்களுடன் நெருங்கிய தொடர்பை கொண்டவர். வடக்கு மக்களுடைய கலாசாரத்தை மதிக்கக்கூடிய ஒருவர். அப்படிப்பட்ட ஒருவருக்கு இந்த பதவி நிலை கிடைத்திருப்பது வரவேற்கத் தக்கது. - என மேலும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

# பெண்ணுக்குப் போதைஊசி செலுத்தி வன்புணர்வுக்கு உட்படுத்திய கும்பல்!

## பருத்தித்துறை பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணத்தில் கும்பல் ஒன்று பெண்ணொருவருக்குப் போதை ஊசி செலுத்தி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண நகர் பகுதியை அண்டிய கிராமத்தை சேர்ந்த 34 வயதுடைய பெண்ணொருவரின் தாய், தந்தையர் உயிரிழந்தமசியை அடுத்து, அந்தப் பெண்ணும், அவரது மூத்த சகோதரியும் பருத்தித்துறை பகுதியில் உள்ள ஆதரவற்றோர் பாதுகாப்பு இல்லத்தில் தங்கி இருந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம், பெண்ணின் மூத்த சகோதரியும் உயிரிழந்த நிலையில், இவரது சகோதரன் இவரை தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்று இருந்தார்.

சகோதரனின் இல்லத்தில் தங்கியிருந்த வேளை ஜனவரி மாதம் சகோதரன் வீட்டில் ஆள்களற்ற வேளை உள்நுழைந்த கும்பல் ஒன்று போதைப் பொருளை வழங்கி, அதனை பலாத்காரமாக நுகர வைத்து, அடித்துத் துன்புறுத்தி அப்பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

தொடர்ந்து வந்த நாள்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இந்நிலையில் நேற்றைய தினம் பருத்தித்துறை பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டில் குறித்த பெண் தங்கி நின்ற வேளை அங்கும் குறித்த கும்பல் சென்று, பெண்ணுக்கு போதை ஊசி செலுத்தி, தாக்கி வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதில் காயமடைந்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் தனக்கு நேர்ந்த கொடுமைகள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

ஜனவரி மாதம் முதல் பல்வேறு தடவைகள் 10 பேரை உள்ளடக்கிய கும்பல் போதைப் பொருளை கட்டாயப்படுத்தி நுகர வைத்து, உயிர் அச்சுறுத்தல் விடுத்து, தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்தது எனப் பெண் தெரிவித்துள்ளார்.

பெண்ணின் வாக்குமூலத்தை முறைப்பாடாக பதிவு செய்துள்ள பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தடைசெய்யப்பட்ட ‘பிரமிட்’ திட்டங்களில் ஈடுபடும் நிறுவனங்களின் விவரம் அறிவிப்பு

தடைசெய்யப்பட்ட திட்டங்கள் அல்லது பிரமிட் திட்டங்களை செயற்படுத்துகின்றவை என அடையாளம் காணப்பட்ட மேலும் 8 நிறுவனங்களின் பெயர்களை இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்தத் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களில் இணைவதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தகைய நடவடிக்கைகளை ஊக்குவித்தல், நடத்துதல் மற்றும் பணத்தை வழங்குதல் போன்ற குற்றங்களுக்காக, 3 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத்தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படக்கூடும் எனவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.




# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ரூ. 1700 கிடைக்குமா?

## இன்று கூடுகின்றது சம்பள நிர்ணய சபை



மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் முடிவெடுப்பதற்காக சம்பள நிர்ணய சபை இன்று கூடவுள்ளது.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 1700 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி சம்பள நிர்ணய சபை கூடியபோதும் முதலாளிமார் சம்மேளனமும், தோட்ட சேவையாளர் சங்கமும் அதில் பங்கேற்கவில்லை.

இந்நிலையிலேயே 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டு சம்பள நிர்ணய சபை இன்று கூடுகின்றது.

# வடக்கில் இவ்வருடம் மூன்று மாதங்களில் 119 ஆசிரியர்கள் நாட்டை விட்டு ஓட்டம்!



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களிற்குள் மட்டும் 119 ஆசிரியர்கள் எந்தவொரு அனுமதியும் இன்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என வடக்கு மாகாணக்க ல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் தெரிவித்தார்.

வடக்கின் 13 கல்வி வலயங்களிறகு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கும் உட்பட்ட முதல் காலாண்டு காலத்திலேயே இந்த 119 ஆசிரியரகள் அனுமதி இன்றி வெளிநாடுகளிற்குச் சென்றுள்ளனர்.

இவ்வாறு உரிய அனுமதிகள் பெறாமல் நாட்டைவிட்டு வெளியேறியதன் காரணமாக கடமைக்கு சமூளிக்காத இந்த 119 பேரும் தாமாகவே பணியில் இருந்து விலகியதான கடிதம் நிர்வாக நடைமுறைகளிற்கு அமைய அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இதேநேரம் வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட சகல திணைக்களங்களிலும் இருந்து 5 வருட விடுமுறை அனுமதியுடன் இது வரை 173 உத்தியோகத்தர்கள் வெளியேறியுள்ளனர் என பிரதம செயலாளர் அலுவலகத்த கவல்கள் தெரிவிக்கின்றன.

# இளநீரின் விலை மேலும் உயர்வு



நாட்டில் நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக, சந்தையில் இளநீர் ஒன்றின் விலை 220 ரூபா வரை அதிகரித்துள்ளது.

சந்தையில் இளநீருக்கு நிலவும் அதிக கேள்வியே இதற்கு காரணமாகும் என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இளநீர் ஒன்றின் மொத்த விலை, 100 ரூபா முதல் 140 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சு.கவை மீட்டெடுப்பேன்!

## பதில் தலைவர் விஜயதாஸ சபதம்

“ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நிச்சயம் மீட்டெடுப்பேன். நான் கை வைத்த விடயங்களில் தோல்வியில் முடிந்தது கிடையாது.” – என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:–

“நான் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களால் பதில் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். கட்சியில் உறுப்புரிமை இருப்பதால்தான் பதில் தலைவ ராகியுள்ளேன். கட்சியை நிச்சயம் மீட்டெடுப்பேன். நான் கைவைத்த காரியங்கள் தோல்வியில் முடிந்தது கிடையாது.

தற்போதைய அரசில் பல கட்சிகள் உள்ளன. எனவே, சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் எவ்வித



பிரச்சினையும் கிடையாது. புதிய பதவியை ஏற்றுள்ளதால் அமைச்சுப் பதவி பறிபோகும் என நம்பவில்லை.” – என்றார்.

## நெத்திலி மீன்களே கைது

# பிரதான குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாட்டம்

## பொன்சேகா எம்.பி. குற்றச்சாட்டு

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பிர தான சூத்திதாரிகளைக் கண்டுபிடிக்குமாறு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், நெத்திலி மீன்களே சிக்கி வரு கின்றன. உண்மையான குற்றவாளிகள் சுதந்திரமாக வாழும் நிலை காணப்படுகின்றது.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:–

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் நடைபெற்று ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்தத் தாக்குத லில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும் பங்களுக்கும் இன்னும் நீதி நிவாரணம் கிடைக்கப்பெற வில்லை.

குழுக்கள் அமைக்கப்பட்டும், விசாரணை நடத்தப்பட்டும் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை. நீதிக்காக மக்கள் போராடி வந்தாலும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

சஹ்ரான்தான் இந்தத் தாக்குதலை நடத்தினார் என்பது அனைவருக்கும் தெரியும். எனினும், அவருடன் தொடர்பைப் பேணியவர்கள், சஹ்ரான் குழு சுதந்திரமாகச் செயற்பட இடமளித்தவர்கள், தாக்குதல் மூலம் பிரதிபலன் அடைந் தவர்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.



நீதி நிலைநாட்டப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டா லும் சாதாரண அரசியல்வாதி, சிரேஷ்ட அதிகாரிகள், செய லாளர்களால் நீதியை வழங்க முடியாது. நீதி நிலைநாட்டப் பட வேண்டுமெனில், பயங்கரவாதத்தை ஒடுக்கியவர்கள், அத்துறைசார் அனுபவம்மிக்கவர்களால்தான் அதனைச் செய்ய முடியும்.

எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது நாட்டு மக்களுக்காகக் கடமையை உரிய வகையில் நிறைவேற்றுவேன். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளவன் நான். எனவே, எனக்கு வாய்ப்புக் கிடைத்தால் இந்தக் கடமையை நிச்சயம் செய்வேன்.” – என்றார்.

# இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் ஆர்ப்பாட்டத்திற்கு நீதிமன்றம் தடை!

கொழும்பு, ஏப்.24

இலங்கை மின்சார ஊழியர் சங்கம் இன்று நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக பொலிஸார் நேற்று நீதிமன்ற உத்தரவைப் பெற்றனர்.

வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளுக்கு இடையூறாக எந்தவொரு வீதியையும் கடக்க வேண்டாம் என்றும், பொல்துவ சுற்றுவட்டத்தை சுற்றி ஆர்ப்பாட்டம் அல்லது வன் முறையில் ஈடுபட வேண்டாம் என்றும் உத்தரவிடப்பட்டுள் ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது .

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றுள்ளனர். இதே போன்று கஜந்த கருணாதிலகவும் ஒதுக்கீட்டைப் பெற்றிருக்கிறார்.

தமிழ்த் தேசியம் பேசி, மாவீரருக்கு விளக்கேற்றி, சிங்கள அரசை வையும் நமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளான எம்.பிக்கள் சிலரும் இதே போன்ற தொகை ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

உட்கட்சித் தேர்தல்கள் என்றாலும், மக்களைச் சந்திக்கும் தேர்தல்கள் என்றாலும் தனி தமிழ்த் தேசியத்தின் பாதுகாவலர்களாகத் தங்களை காட்டுவோர், நிதி ஒதுக்கீடுகளுக்காக சிங்கள தலைமைகளிடம் விலை போகும் அல்லது பல்லிளிக்கும் காட்சிகளை மறந்து அல்லது மறைத்து விடுகின்றனர். நமக்கு இதெல்லாம் சகஜமப்பா....!

ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இப்படி ஐ.தே.க. தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடன் 'கள்ள உறவு' அரசியல் நடத்துவோருக்கு எதிராகக் கொதிப்புக் கிளம்பி இருப்பதுதான் லேட்டஸ்ட் தகவல்.

திருடர்களுடன் டீல் போட மாட்டேன் என்று அவர்களின் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகக் கூற, கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒதுக்கீடுகளுக்காக கள்ள டீல் போடுகிறார்கள்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசு கட்சியின் வழக்குத் தவணை இன்று - திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில். பரபரப்பு தகவல்களுக்கு இன்று பஞ்சம் இருக்காது என்று நம்புவோம்...!

## நாமலுக்குக் கிடைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யடைந்துள்ளார்கள் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாமல் ராஜபக்ஷ தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மொட்டுக் கட்சியின் கூட்டத்தில் பஸில் ராஜபக்ஷவும் சமல் ராஜபக்ஷவும் கடும் சோகமாகக் காணப்பட்டார்கள்.

அதற்குக் காரணம் நாமல் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டமைதான். ராஜபக்ஷ சகோதரர்கள் யாரும் இந்தப்

பதவிக்கு நியமிக்கப்படக்கூடாது என்று சமல் எவ்வளவு எடுத்துக் கூறியும் நாமலை நியமித்துவிட்டார்களே என்ற கவலைதான் அவருக்கு.

இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் கூடிப் பேசினர்.

"நாமலின் இந்த நியமனம் காரணமாக மொட்டுக் கட்சிக்குள் பிளவு ஒன்று ஏற்பட்டுள்ளது. நாம் இதில் கவனமாக இருக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் வருவதால் இரண்டு அணிகளும் எமக்குத் தேவை. நாம் இரண்டு தரப்பையும் அணைத்துக்கொண்டு நடுநிலையாகச் செல்ல வேண்டும்." - என்று ஐ.தே.கவின் முக்கியஸ்தர்கள் முடிவெடுத்தனர்.

- இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியலிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் இணைய ஊடகம் ஒன்றுக்குக் காணொலி வடிவில் வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்காக நீங்கள் இருவரும் (சுமந்திரன், சிறீதரன்) நின்றபோது புலம்பெயர் தமிழ் வர்த்தகர் ஒருவர் கட்சி ஒன்றை வழங்குவதாக உங்கள் இருவருடனும் டீல் பேசினாரா?" - என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனக்கு ஒருவர் மூலமாகப் புலம்பெயர்தமிழ்வர்த்தகர்ஒருவர்செய்திஅனுப்பியிருந்தார். அதாவது, கட்சிகள் விற்பனைக்கு உண்டு, உங்களுக்கு வேண்டுமா? என்று அந்தப் புலம்பெயர் தமிழ் வர்த்தகர் சார்பாக இன்னொருவர் (எனக்கு ஆட்களைத் தெரியாது) செய்தி அனுப்பியிருந்தார். உரியவர் என்னுடன் நேரடியாகப் பேசவில்லை என்றபடியால் அந்தப் புலம்பெயர் தமிழ் வர்த்தகரின் பெயரை என்னால் பகிரங்கப்படுத்த முடியாது.

என்னைத் தலைவர் தெரிவுப் போட்டியிலிருந்து விலகப் பண்ணுவதற்காகவே என்னுடன் இந்த டீல் பேசப்பட்டது.

புலம்பெயர் தமிழ் வர்த்தகர்கள் தமிழரசுக் கட்சியில் அதிக செல்வாக்கு செலுத்துகின்றார்கள் என்பது உண்மை. இது இன்று பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

இது சம்பந்தமாக, ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் சர்வதேச மட்டத்தில் முக்கிய பதவியை வகித்த ஒருவர், எனக்கு அந்த நேரத்திலேயே ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். வடக்கிலும் அரசியலுக்குள் பணம் புகுந்து விட்டது, இது விரும்பத்தக்க விடயம் அல்ல, இதைப் பற்றி நீங்கள் கவனிக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். இப்போது நான் பின்னால் திரும்பிப் பார்க்கின்றபோது பல விடயங்கள் அப்படி நடக்கின்றன போல்தான் தெரிகின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் எங்கள் கட்சியைச் சேர்ந்த சிலரிடத்தில் எனக்கு எதிராகக் கருத்துக்களைக் கூறுமாறு ஒலிவாங்கிகளை நீட்டி கருத்துக்கள் பெறப்பட்டன. சிலரிடம் அப்படிக் கேட்டபோது அவர்கள் மறுத்தும் உள்ளனர். அதனால்தான் எனக்கு அந்த விடயமே தெரியவந்தது.

சுமந்திரனுக்கு எதிரான கருத்துக்களைச் சொல்வீர்களேயானால் உங்கள் தேர்தல் பிரசார செலவுகளையெல்லாம் தாங்கள் பொறுப்பேற்பதாக அவர்களிடம் சொல்லப்பட்டிருந்தது. அதற்கமைய சிலர் எனக்கு எதிராகக் கருத்துக்களைக் கூறியிருந்தார்கள். சிலர் எனக்கு எதிராகக் கருத்துக்களைக் கூற மறுத்தும் இருந்தார்கள்.

அப்படியான முயற்சிகள் இன்று கூடுதலாக வலுப்பெற்றுள்ளன. இது தமிழ் மக்களுடைய கொள்கை அரசியல் விடயத்தில் மிகவும் பாதகமான பின்விளைவை ஏற்படுத்தும்.

நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டபடியால் புலம்பெயர் தமிழ் வர்த்தகர்களிடம் பகிரங்கமாக ஒரு கோரிக்கையை விடுகின்றேன். தயவு செய்து தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து விலகி இருங்கள் என்று புலம்பெயர் தமிழ் வர்த்தகர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் செய்யும் வர்த்தகமும், உங்களுடைய இலாபம் ஈட்டும் வேலையும் வேறு வழிகளில் இருக்கட்டும். தமிழ்த் தேசிய அரசியலுக்குள் தயவு செய்து நுழையாதீர்கள்.

தமிழ் மக்களின் விடிவுக்கான பயணத்தை அரசியல் பாதையூடாக நாங்கள் முன்னெடுக்கின்றபோது அதற்குள் பணம் உட்செலுத்தப்பட்டால் அது பாரிய மோசமான பின்னடைவுகளை எங்கள் மக்களிடத்தில் கொண்டுவந்து சேர்க்கும்." - என்றார்.

## இன்று இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்ராஹிம் ரைசி இன்று இலங்கை வருகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அழைப்பின் பேரில், ஈரான் ஜனாதிபதி ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளதுடன், 2008 ஏப்ரல் மாதத்தில் அப்போதையஈரான்ஜனாதிபதிமொஹமட் அஹமதிநெஜாட்டின் இலங்கை விஜயத்திற்குப் பின்னர், ஈரான் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்வதுஇதுவே முதல் தடவையாகும்.

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இதன்போது கைசாத்திடப்படவுள்ளன.

மகாவலி திட்டத்தின் பின்னர், நாட்டின் மிகப்பெரிய நீர்ப்பாசனத் திட்டமாக வரலாற்றில் இணையும் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஈரான் மற்றும் இலங்கை ஜனாதிபதிகளின் தலைமையில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (மற்றொரு செய்தி 15ஆம் பக்கத்தில்...)



# ஆளுநர் அலுவலக செய்தி அறிக்கை முரசு நாளிதழின் சில பிரதிபலிப்புகள்




"பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஊடகங்கள் எம்மோடு இணைந்து செயற்பட வேண்டும். அரச சேவையைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் சிக்கலை எதிர்நோக்கும் பட்சத்தில் ஊடகங்கள் அவற்றை எமக்கு அறிவிக்க முடியும். அதைவிடுத்து விமர்சனம் என்ற போர்வையில் ஊடக தர்மத்திற்கு எதிராக ஊடகங்கள் செயற்படக்கூடாது என்பதே எமது அவா.

"ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் நாம் தலையிடுவதில்லை என்பதுடன் ஊடகங்களுடன் இணைந்து மக்கள் பணியாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதையும் கூறிக்கொள்கிறோம்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் சார்பில் அவரது அலுவலகம் அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'வலம்புரி' நாளிதழில் அதன் ஆசிரியர் வடக்கு ஆளுநர் குறித்து அவருக்கு ஒரு திறந்த மடல் என்ற பெயரில் கடந்த மார்ச் 18ஆம் திகதி வரைந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் வடக்கு ஆளுநர் அலுவலகத்தின் முறைப்பாட்டின் பேரில் அந்த ஆசிரியர் தலையங்கக் கருத்துக்காக அவர் யாழ் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு இருந்தார்.

அந்த நடவடிக்கையை ஆட்சேபித்தும், கண்டித்தும் 'மீண்டும் ஊடக அடக்குமுறை?' என்ற தலைப்பில் நேற்று நமது "காலை முரசு" நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் வெளியாகியிருந்தது.

அதற்கும் பதிலளிக்கும் விதத்தில் நேற்று ஆளுநர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையிலேயே "ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் நாம் தலையிடுவதில்லை என்பதுடன் ஊடகங்களுடன் இணைந்து மக்கள் பணியாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதையும் கூறிக்கொள்கிறோம்" என்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

அதில் –

மேற்படி 'வலம்புரி' பத்திரிகையின் ஆசிரியர் ஓர் அரச உத்தியோகத்தர் என்று தெரிவித்து, அதையொட்டி – அவரின் அரச உத்தியோகத்தை ஒட்டி – பல விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

அவற்றிற்கும் நமது பத்திரிகையில் நேற்று வெளியான ஆசிரியர் தலையங்கத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. அதனால் ஆளுநர் அலுவலகத்தின் அந்த விடயங்கள் அடங்கிய அறிக்கையை நாம் இங்கு பிரசுரிக்கவில்லை.

எனினும் –

ஆளுநரின் அலுவலகத்தின் அறிக்கையொட்டி பின்வரும் விடயங்களை ஆளுநருக்கு அவரது அலுவலக தொகுதி அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1. ஆளுநர் தமது அதிகாரத்தின் கீழ் வரும் அரச அதிகாரிகள் தொடர்பில் சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், ஒழுங்குமுறை அடிப்படையிலும் எடுக்கும் நடவடிக்கை அந்த அரசு அதிகாரிக்கும், ஆளுநர் தரப்புக்கும், ஏனைய அரசு அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட விடயம். விசேடமான செய்திக் காரணம் ஏதும் இருந்தாலன்றி அதற்குள் ஊடகம் என்ற முறையில் நாம் தலையிட வேண்டிய தேவை எதுவும் இல்லை. தலையிடுவது முறையும் அன்று.

2. 'வலம்புரி' செய்தியில் அல்லது ஆசிரியர் தலையங்கத்தில் தவறு இருந்தால் அது தொடர்பாக ஆளுநர் அலுவலகம் எடுக்கும் நடவடிக்கை பொலிஸ் மூலமானதாக இருக்க முடியாது. அதற்கான அதிகாரம் பொலிஸாருக்கும் இல்லவே இல்லை என்பதை ஆளுநருக்கும் சேர்த்துச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

3. இந்த விடயத்தில் "அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு எதிராகத் திணைக்கள மட்ட ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்வதற்கான முன்னோடியாகவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாக" ஆளுநர் அலுவலக அறிக்கை கூறுவதை காதில் பூச்சூற்றும் விளக்கமாகவே கருதுகிறோம்.

4. இன்னொரு மிகவும் ஆபத்தான விடயத்தையும் ஆளுநர் அலுவலக அறிக்கை கிளப்பியிருக்கின்றது. "சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியர் தமது தலையங்கத்தில் சிங்களவர் ஒருவர் வடக்கின் ஆளுநராக இருந்தால்...." என்று எழுதியிருக்கின்றமையைச் சுட்டி, இன நல்லிணக்கத்திற்குப் பாதகம் ஏற்படுத்தும் வகையில் அவர் எழுதுகின்றாரோ என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டி உள்ளது என்றும் ஆளுநர் அலுவலக அறிக்கை கூறுகிறது. இது தொடர்பில் பின்வரும் விடயங்களை சகோதர ஊடகம் என்ற முறையில் ஆணித்தரமாகக் கூறி வைக்க விரும்புகிறோம்.

(அ) தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் வடக்கில் சிங்களவர் ஒருவர் ஆளுநராக இருந்தால் நன்றாக இருக்கும் என்ற பாணியில் எழுதினால் அது இன நல்லிணக்கத்துக்கு குந்தகம் அல்ல. இன நல்லிணக்கத்திற்கான எத்தனமோ என்றுதான் பார்க்க வேண்டும். அப்படி இருக்க, அந்த எண்ண ஓட்டத்தை தவறாக அர்த்தப்படுத்தும் ஆளுநர் அலுவலகத்தின் நோக்கத்தில் ஆபத்தான சதி உட்கருத்துப் புதைந்து இருக்கின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

(ஆ) இன நல்லிணக்கத்துக்கு எதிரான நடவடிக்கை என்று காட்டி, ICCPR (International Covenant on Civil and Political Rights) தொடர்பான சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களை முடக்கி, கைது செய்து, பிணையில் வெளிவர முடியாத வகையில் சிக்க வைக்கும் ஒரு சதித்திட்டம் ஒன்று ஆளுநர் அலுவலகத்தில் திட்டமிடப்படுவதன் ஆரம்ப நகர்வோ இந்தக் கருத்து என்று அச்சம் நமக்கு ஏற்படுகின்றது. ஆளுநர் அலுவலகம் இவ்விடயத்தை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றிருப்பது அந்தச் சந்தேகத்தையே தந்து நிற்கிறது.

5. 'வலம்புரி' ஆசிரியர் தனிப்பட்ட விடயங்களுக்காக ஊடகத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகிறார் என்று குற்றம் சுமத்தும் ஆளுநர் அலுவலக அறிக்கை, மறுபுறம் ஊடகத்தை அடக்குவதற்காக அரச ஊழியரின் அலுவலக பொறுப்பு மீது ஆளுநர் அலுவலகம் முறையற்ற அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டும் எழலாம் என்பதை மறந்து விடக்கூடாது.

6. கடைசியாக ஆளுநர் அலுவலகத்துக்கு ஊடக தரப்பு என்ற முறையில் ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறோம். ஊடகங்களில் வந்த செய்திகளின் தவறுகளைக் கையாளும் பொதுவான முறைமை ஒன்று உண்டு. அதற்கு சட்ட விதிமுறைகள் உள்ளன. பத்திரிகை செய்திகளுக்கு குற்றவியல் பொறுப்பு கூறும் நடைமுறை இப்போது சட்டத்தில் இல்லை. ஆகையினால் இந்த விடயத்தைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று, 'வலம்புரி' ஆசிரியரை நீங்கள் பொலிஸ் மூலம் பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பித்தமை, வாக்குமூலம் பெற்றமை எல்லாம் தவறு. ஊடக சுதந்திரத்தில் தலையிடும் முறையற்ற செயல்பாடுதான். அத்தகைய போக்கைத் தொடர்ந்தும் அம்பலப்படுத்தி, எதிர்ப்போம். அவரை உங்களின் கீழ் பணியாற்றும் ஓர் அரசு ஊழியராகக் கருதி, அவரை அரச திணைக்கள ரீதியாக நீங்கள் கையாண்டிருந்தால் அது வேறு விடயம். அதிலும் கூட அநீதி இருக்குமானால் ஊடகங்கள் அது குறித்தும் குரல் எழுப்பும். அது தவிர்க்க முடியாத நமது கடப்பாடு.

7. கடைசியாக "ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் நாம் தலையிடுவதில்லை என்பதுடன் ஊடகங்களுடன் இணைந்து மக்கள் பணியாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம்" என்ற ஆளுநர் சார்பிலான கூற்றுக்கு பெரிதும் மதிப்பளிக்கிறோம். கடந்த காலத்திலும் இப்போதைய பதவிக் காலத்திலும் இதுவரைத் தாங்கள் அதனைச் செயலில் உறுதி செய்தே வந்துள்ளீர்கள் என்பதையும் பொறுப்புள்ள ஊடகம் என்ற முறையில் தவறாது இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

– ஆசிரியர் –

வலம்புரி

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மே தின எதிர்பார்ப்புகள்

தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமது புஜபல பராக்கிரமத்தை பறைசாற்றிக் காட்டுவதற்கான நிகழ்வாக வருடம் தோறும் பயன்படுவது மே தினம்தான்.

மே தினக் கூட்டங்களுக்கு பல்லாயிரக் கணக்கானோரைத் திரட்டி, தங்கள் கட்சி இன்னும் உயிர்ப்போடும் துடிப்போடும் இருப்பதாக பறைசாற்றுவதுதான் அக்கட்சிகளின் முதல் தந்திரம்.

அதனால் இத்தகைய மே தின கூட்டங்களுக்கு பல்லாயிரம் பேரை ஒன்று திரட்டுவதற்காகக் கட்சிகள் கோடி கோடியாகக் கொட்டிச் செலவழிப்பதும் வழமை. இப்படி ஆள்களைத் திரட்டும் தந்திரோபாயம் வாய்க்கப் பெற்ற தரப்புகளை கட்சிகள் தேடிப்பிடித்து ஒழுங்குபடுத்திக் கொள்வதும் நடப்பதுதான்.

தமது அரசியல் எழுச்சியின் பின் 2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் முதலில் அடி வாங்கிய ராஜபக்ஷக்கள் தொடர்ந்து அதே ஆண்டில் வந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் முன்னிலை இழந்து நின்றனர்.

எனினும், குறுகிய காலத்தில் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு மீளெழுச்சி பெற்ற ராஜபக்ஷக்கள் 2017 மே தினத்தன்று கொழும்பு காலி முகத்திடலில் பல லட்சம் மக்கள் கூட்டத்தைத் திரட்டி நாட்டின் அரசியலையே அதிர வைத்தனர். அந்த உணர்வெழுச்சியே அடுத்த ஆண்டில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும், அதன் பின்னர் வந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷக்களையும் அவர்களின் மொட்டுக் கட்சிகளையும் தூக்கி நிறுத்தியது என்பதும் சரித்திரம்.

இப்படி முக்கியத்துவம் மிக்க மே தினம் இம்முறை இன்னும் ஒரு வாரத்தில் வருகின்றது.

அதுவும் இம்முறை இந்த வருடம் தேர்தல் ஆண்டு என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மே தினத்தில் தமது புஜபல பராக்கிரமத்தை காட்டுவதில் கட்சிகள் முனைப்பாகவும் தீவிரமாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பி. காலம் காலமாக பெரும் எடுப்பில் மே தினக் கூட்டத்தை ஒழுங்குப்படுத்தி நடத்துவது வழமை. ஆனால் மே தினக் கூட்டத் துக்கு திரளும் மக்கள் ஆதரவு அலையை ஏனோ மக்களின் வாக்களிப்பு சமயத்தில் - தேர்தல் முடிவுகளில் - ஜே.வி.பியினால் காட்ட முடிவதில்லை.

பல சமயங்களில் ஜே.வி.பிக்குத் திரளும் கூட்டத்தையும், தேர்தல் முடிவுகளையும் பார்க்கும்போது சில தரப்புகள் ஜே.வி.பியைப் பார்த்து 'கூட்டம் உங்களுக்கு; ஓட்டு எங்களுக்கு!' என்று நையாண்டி செய்வது போன்ற நிலைமைதானோ என்ற எண்ணம் பலருக்கும் ஏற்படுவது உண்டு. அந்த நிலையை மாற்றிக் காட்ட இம்முறை ஜே.வி.பி. பகீரதப்பிரயத்தனம் செய்கின்றது.

இன்னும் ஐந்து மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல். அதற்கான முன்னோட்டத்தை மே தினத்தில் காட்டுவோம் என்று ஜே.வி.பி. உட்பட அனைத்து முன்னணிக் கட்சிகளும் திடமாக நிற்கின்றன.

போன பொதுத்தேர்தலில் ஒரு மாவட்டத்தில் கூட விருப்பு வாக்கு எண்ணும் தகுதியை பெறாத ஐக்கிய தேசியக் கட்சி கூட, இப்போது ஜனாதிபதிப் பதவியைத் தமது கட்சி தலைவர் வைத்திருக்கின்றமையால், இம்முறை மே தினக் கூட்டத்தை மருதானையில் நடத்தி ஒரு லட்சம் பேரைத் திரட்டிக் காண்பிப்போம் என்று துள்ளுகின்றது.

மொட்டுக் கட்சியின் மேதினம் கொழும்பு கம்பல் பார்க்கில். இத்தகைய கூட்டங்களுக்கு ஆள்களைத் திரட்டி, மூக்கில் விரலை வைக்கும் விதத்தில் ஜனசமுத்திரத்தை பெருக்கெடுக்க வைக்கும் தந்திரம் வாய்க்கப்பெற்ற பஸில் ராஜபக்ஷ நேரடியாகக் களத்தில் - கூட்ட ஏற்பாடுகளில் - மும்மரமாக இருக்கின்றார் என்று தகவல். மே தினக் கூட்டத்தில் வைத்து தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம் என்று கட்சி வட்டாரங்களில் இருந்து வெளியான தகவலும் மொட்டுக் கட்சியின் மே தினக் கூட்டம் குறித்து பலத்த எதிர்பார்ப்பை தந்து நிற்கின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் மே தினத்திற்காக பெரும்எடுப்பில் தயாராகின்றது. இன்னும் இடம் பற்றிய அறிவிப்பு வெளியாகவில்லை.

உள்கட்சி மோதலினால் பிளவு பட்டுக் கிடக்கும் சுதந்திரக் கட்சி, அதனால் இந்த முறை மே தினக் கூட்டத்தைத் தவிர்த்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப் படுகிறது.





# மக்களிடம் பிரதமர் மோடி மன்னிப்பு கேட்கவேண்டும்

## சீமான் கூறுகிறார்

“ராஜஸ்தான் மாநிலத்தில் தேர்தல் பரப்புரையின்போது இஸ்லாமியர்களை இழிவுப்படுத்தி பேசியதற்கு பிரதமர் மோடி, நாட்டு மக்கள் அனைவரிடமும் உடனடியாக பொது மன்னிப்பு கேட்க வேண்டும்.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ராஜஸ்தான் மாநிலத்தில் தேர்தல் பரப்புரையின்போது இஸ்லாமியப் பெருமக்களை இழிவுப்படுத்தும் வகையில் பிரதமர் மோடி பேசியுள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது. இந்தியப் பெருநாடு விடுதலையடைவதற்கு முன்பிருந்தே இஸ்லாமியப் பெருமக்கள் நீண்டகாலமாக இந்த நிலத்தில் நிலைத்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மண்ணின் கோடிக்கணக்கான பூர்வகுடி மக்கள் இஸ்லாத்தை விரும்பி ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் யாரும் இந்த நாட்டுக்கு அந்நியர்கள் அல்ல. ஆனால், பிரதமர் மோடி இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள் அனைவரும் இந்த நாட்டுக்கு வெளியிலிருந்து வந்தவர்கள் போலவும், இந்துகளின் சொத்துகளை அபகரித்தது போலவும் பேசுவது அற்ப அரசியல் லாபத்துக்காக மதப்பிரிவினையை ஏற்படுத்துகின்ற சிறிதும் மனச்சான்றற்ற செயலாகும்.

தம்முடைய ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக நாட்டு மக்களின் மனங்களில் வெறுப்பு நஞ்சை விதைக்கும் பிரதமர் மோடியின் பரப்புரை பேச்சு இந்த நாட்டினை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். மீண்டும் மோடி இந்தியாவின் பிரதமரானால் இந்த நாட்டில் சமத்துவம், ஜனநாயகம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை என்பதெல்லாம் முற்று முழுதாக ஒழிக்கப்பட்டுவிடும்.

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டையும், பன்முகத்தன்மையையும் சிதைத்தழிக்கும் மோடி தலைமையிலான பா.ஜ.கவுக்கு தேசபக்தி குறித்துப் பேச எந்தத் தகுதியும் கிடையாது. நடைபெறுகின்ற மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவின் பாசிச மனப்பான்மைக்கு நாட்டு மக்கள் தக்கப் பாடம் புகட்டுவார்கள்.

ஆகவே, இஸ்லாமியர்களை இழிவுப்படுத்தி பேசியதற்கு பிரதமர் மோடி நாட்டு மக்கள் அனைவரிடமும் உடனடியாகப் பொதுமன்னிப்பு கேட்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பட்டியலின மக்களுக்கான இடஒதுக்கீட்டை முஸ்லிம்களுக்கு வழங்க காங்கிரஸ் முயற்சி

## பிரதமர் மோடி தெரிவிப்பு

“பட்டியலின, பழங்குடியின மக்களுக்கான இடஒதுக்கீட்டை குறைத்து, அதை இஸ்லாமியர்களுக்கு வழங்க காங்கிரஸ் முயற்சி செய்தது.”

– இவ்வாறு பிரதமர் மோடி குற்றம்சாட்டினார்.

ராஜஸ்தானின் டோங் நகரில் நேற்று நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி,

“பட்டியலின, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான இடஒதுக்கீட்டை மதத்தின் அடிப்படையில் நிறுத்தவோ, பிரிக்கவோ அனுமதிக்க மாட்டோம் என்று உத்தரவாதம் அளிக்கிறேன். அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் தனது உரை ஒன்றில், நாட்டின் வளங்களை பெறுவதில் முஸ்லிம்களுக்கே முன்னுரிமை என்று தெரிவித்திருந்தார்.

இது ஒரு தற்செயல் நிகழ்வு இல்லை. இது வெறும் அறிக்கை மட்டும் இல்லை. காங்கிரஸ் கட்சியின் சித்தாந்தமே வாக்கு வங்கியும், சமரச அரசியலும்தான்.

கடந்த 2004 ஆம் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைத்ததும் முதலில் செய்த விஷயங்களில் ஒன்று ஆந்திராவில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை குறைத்து, அதை இஸ்லாமியர்களுக்கு வழங்கியதுதான். அது ஒரு சோதனை முயற்சித் திட்டம். பின்பு அதனை நாடு முழுவதும் செயல்படுத்த காங்கிரஸ் விரும்பியது.

2004 முதல் 2010 ஆம் ஆண்டு வரை நான்கு முறை இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த காங்கிரஸ் முயற்சித்தது. ஆனால், சட்டத் தடைகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் விழிப்புணர்வு காரணமாக காங்கிரஸ் கட்சியின் எண்ணம் ஈடேறவில்லை.



அந்தத் திட்டத்தை, கடந்த 2011 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி நாடு முழுவதும் அமல்படுத்த முயற்சி செய்தது. வாக்கு வங்கி அரசியலுக்காக எஸ்.சி, எஸ்.டி. மற்றும் ஓ.பி.சி. பிரிவினருக்கான உரிமைகளைப் பறித்து, அதை மற்றவர்களுக்கு அளிக்கும் விளையாட்டை அக்கட்சி செய்தது. அரசியல் அமைப்பு மற்றும் பி.ஆர். அம்பேத்கரை குறித்து அக்கறை இல்லாமல், காங்கிரஸ் கட்சி வேண்டுமென்றே அதனைச் செய்தது.” – என்றார்.

# ஆங்கிலக் கால்வாயை கடக்க முற்பட்ட படகு விபத்திற்குள்ளானதில் ஐவர் பலி





ஆங்கிலக் கால்வாயை கடக்க முற்பட்ட படகொன்று விபத்திற்குள்ளானதில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

பிரான்ஸில் இருந்து பிரித்தானியா நோக்கி 110 குடியேற்றவாசிகளை ஏற்றிச்சென்ற படகொன்றே விபத்திற்குள்ளாகியுள்ளது.

படகு விபத்தில் உயிரிழந்தவர்களில் குழந்தை ஒன்றும் உள்ளடங்குவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதிகளவானோர் பயணித்தமையே படகு விபத்திற்கான காரணமென சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

காணாமற்போனவர்களைத் தேடும் பணிகள், பிரான்ஸ் கடலோர பாதுகாப்பு அதிகாரிகளால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன.

47 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ருவாண்டாவுக்கு புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் சட்டமூலத்தை பிரித்தானியா நிறைவேற்றிய சில மணி நேரங்களில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களை கட்டுப்படுத்தும் வகையில், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தைவான் தலைநகர் தைபேயில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்





தைவான் தலைநகர் தைபேயில் நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் தைபே மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கட்டடங்கள் குலுங்கியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

ஏற்கனவே, கடந்த 3 ஆம் திகதி தைவானின் – ஹுவாலியன் நகருக்கு அருகே ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.2 மெக்னிடியூட்டாக பதிவானது.

இதில் 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலின் தாக்குதலில் 18 குழந்தைகள் உயிரிழப்பு

காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான் வழித் தாக்குதலில் 18 குழந்தைகள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்.

காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதலானது கடந்த 6 மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது.

இந்த நிலையில், இஸ்ரேல் இராணுவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய வான் வழி தாக்குதலில், காசா பகுதியில் உள்ள மருத்துவமனை அருகே இருந்த கட்டடம் சேதமடைந்தது.

மேற்படி தாக்குதலில் அந்தக் கட்டடத்தில் தங்கியிருந்த 18 குழந்தைகள், இரண்டு பெண்கள் உட்பட 22 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுவரை நடத்தப்பட்ட தாக்குதலில், 34 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர் என தகவல் வெளியாகியுள்ளது.



இதற்கிடையே, காசா மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலுக்கு உதவும் வகையில் கூடுதல் நிதியை அமெரிக்க அரசு ஒதுக்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவனொளி பாதமலை யாத்திரிகர்கள் இவ்வருடம் எறிந்து சென்ற 3 தொன் பிளாஸ்டிக் போத்தல்கள்







(செ.தி.பெருமாள்)

இவ்வருடம் ஆரம்பமான சிவனொளி பாதமலை யாத்திரை காலத்தில், நல்லதண்ணி – சிவனொளி பாத மலைக்குச் செல்லும் வீதியில் உள்ளூர் யாத்திரிகர்களால் 25 தொன் மக்காத திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டன.

அவற்றில் பிளாஸ்டிக் போத்தல்கள் மட்டும் 03 தொன்கள் உள்ளன என மஸ்கெலியா பிரதேச சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் சிவனொளி பாத மலை பருவகாலம் ஆரம்பித்து 5 மாதங்களில் நல்லதண்ணி – சிவனொளி பாத மலை செல்லும் வழித்தடத்தில் இருந்து யாத்திரைக்கு வந்த உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சுமார் 25 தொன் மக்காத திண்மக் கழிவுகளை சுற்றாடலில் எறிந்து சென்று உள்ளனர்.

இதிலேயே சுமார் 03 தொன் பிளாஸ்டிக் போத்தல்கள் மட்டும் உள்ளன என மஸ்கெலியா பிரதேச சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி ரசிகா சமரநாயக்க தெரிவித்தார்.

ஆறு மாதங்களாக தொடரும் பருவ நிகழ்வின் போது, மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சுற்றாடல் பிரிவினால் நல்லதண்ணி – சிவனொளி பாத வீதி மற்றும் நல்லதண்ணி நகர வீதிகளில் தேங்கும் மக்காத திண்மக் கழிவுகள் சேகரிக்கப் பட்டு அகற்றப்படுகின்றன.

2023 டிசம்பரில், சிவனொளி பாத மலை யாத்திரை காலம் தொடங்கியதில் இருந்து, வார இறுதி நாள்களில் மட்டுமல்லாமல் வார நாள்களிலும் அதிக எண்ணிக்கையிலான யாத்ரீகர்கள் வருகை தருவதால், மக்காத திண்மக்கழிவுகள் மற்றும் அகற்றப்படும் குப்பைகளின் அளவு அதிகமாக உள்ளது என்று சுற்றுச்சூழல் அதிகாரி மேலும் கூறினார்.

இக் கழிவுகள் யாவும் பிரதேச சபையின் பணியாளர்களால் சேகரிக்கப்பட்ட பின்னர் மஸ்கெலியா, ரிக்கட்டான் பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த ஆண்டு சிவனொளி பாத மலை பருவகாலம் முடிய இன்னும் ஒரு மாதம் உள்ளது.

எதிர் வரும் வைகாசி விசாகம் பௌர்ணமி நாளில் இது நிறைவுக்கு வர உள்ளது.



# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையில் முற்போக்குத் தமிழர் கழகத்தின் இளைஞர் மாநாடு!

(பழுவூரான்)

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் முற்போக்குத் தமிழர் கழகத்தின் இளைஞர் பாசறை நடத்திய இளைஞர் மாநாடு நேற்று செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் முற்போக்குத் தமிழர் கழகத்தின் தலைவரும், வர்த்தக, வாணிப இராஜாங்க அமைச்சருமான சதாசிவம் வியாழேந்திரன் ஆதரவாளர்கள் புடைசூழ மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்திலிருந்து ஊர்வலமாக மாநகர மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இம்மாநாட்டில், ஆரம்ப நிகழ்வாக மூன்று மாவீரர்களை மண்ணின் விடுதலைக்காக அர்ப்பணித்த வீரத்தாய் திருமதி பத்மாவதி வன்னியசிங்கம் பிரதான தீபச்சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து,வரவேற்பு நடனம், அதிதிகள் உரைகள் என்பன நடைபெற்றன.

இதன்போது முற்போக்குத் தமிழர் கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.













# மலையகத் தோட்டங்களில் எந்நேரமும் சுற்றித் திரியும் காட்டுப் பன்றிகளால் பீதி

(செ.தி.பெருமாள்)

மலையகத் தோட்டங்களின் பல பகுதிகளிலும் இரவு வேளைகளில் மட்டுமன்றி பகல் நேரங்களிலும் தொடர்ந்து காட்டுப்பன்றிகள் சுற்றித் திரிகின்றமையால் தாங்கள் அச்சமடைந்து உள்ளனர் என மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகத் தோட்டங்களிலும், நகரங்கள் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும், சாலைகள் அருகிலும், தேயிலைத் தோட்டங்களின் உள் பகுதிகளிலும், வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்யப்பட்ட பகுதியில் , குப்பைகள் குவிந்து கிடக்கும் பகுதிகளிலும் நகரங்களுக்கு அருகாமையிலும் காட்டுப் பன்றிகள் தொடர்ந்து சுற்றித் திரிகின்றன.

காட்டுப் பன்றிகள் தொடர்ந்தும் தோட்டங்களில் காணப்படுவதால், மலைப் பாம்பு மற்றும் புலிகள், சிறுத்தை போன்றவை அவற்றை வேட்டையாட அவ்விடங்களுக்கு வருகின்றன. அதனால் பணிக்குச் செல்லும் தொழிலாளர்கள் தமது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.



# சம்பியனானது காவத்தமுனை ஸாரிக் சிறுவர் கழகம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)


மட்டக்களப்பு மாவட்ட செயலகங்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் காவத்தமுனை ஸாரிக் சிறுவர் கழகம் சம்பினாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக சிறுவர் சபையின் அனுசரணையில் மட்டக்களப்பு பிரதேச செயலகங்களைப் பிரதிநிதித்துப்படுத்தும் 14 அணிகளுக்கிடையிலான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி மட்டக்களப்பு, இருதயபுரம் மேற்கு எவர்கிரீன் ஈஸ்ரன் ஸ்டார் மைதானத்தில் நடைபெற்றது.



இப்போட்டியில் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் காவத்தமுனை ஸாரிக் சிறுவர் கழகத்தினர் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்ததுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜ.யு.முரளிதரன் சாம்பியன் கிண்ணத்தை வழங்கி, அணியின் வீரர்களுக்கு பதக்கங்களையும் அணிவித்தார்.



# சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதி அனுர குமாரவை சந்தித்துப் பேச்சு



ஈரான் ஜனாதிபதி இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இந்த நிலையில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான துணை அமைச்சர் சன் ஹையன் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று நாட்டை வந்தடைந்தார்.

சர்வதேச அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான மத்திய குழுவிற்கு நேரடியாக பொறுப்புக் கூறும் சர்வதேசப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும்.

2023 ஆம் ஆண்டில் இந்த பிரிவின் துணை அமைச்சராக பதவியேற்ற சன் ஹையன், இதற்கு முன்னர் சிங்கப்பூருக்கான சீனத் தூதுவராக கடமையாற்றினார்.

நேற்று முற்பகல் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட அவர், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸநாயக்கவைச் சந்தித்தார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான துணை அமைச்சர் சன் ஹையனுடன், இலங்கைக்கான சீன தூதரகத்தின் கன்சியூலர், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதி பணிப்பாளர், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் உள்ளிட்டோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில், கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களான விஜித்த ஹேரத், கலாநிதி ஹரினி அமரசூரிய, பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் சுனில் ஹந்துன்னெத்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போதைய அரசியல் நிலைமை, எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள தேர்தல் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசியல் நிலைமைகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடியதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பிற்கு முன்னர், சீனப் பிரதிநிதிகள் கட்சியின் பிரதேச தலைவர்களுடன் மஹரகமவில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட மட்ட மற்றும் பிரதேச மட்ட அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டனர்.







## மகாவலி கடலில் கலக்கும் இடத்தில்

# மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்காதிருக்கத் தீர்மானம்

மகாவலி உள்ளிட்ட பிரதான ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களுக்கு அருகில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்காதிருக்க புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தீர்மானித்துள்ளது.

மகாவலி கங்கை கடலில் கலக்கும் திருகோணமலையை அண்மித்த பகுதியில் இம்முறை மணல் அகழ அனுமதி வழங்கப்பட மாட்டாதென பணியகத்தின் தலைவர், பேராசிரியர் ரஞ்சித் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதற்கும் கடல்நீர் நிலப் பரப்பிற்குள் உட்புகுவதைத் தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்டவர் கைது

ஐரோப்பாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடி செய்த நபர் படல்கம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தலங்காவ பகுதியை சேர்ந்த 29 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றை நடத்தி, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி மேற்படி நபர் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

சந்தேகநபர், கனடாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி பெண் ஒருவர் மற்றும் ஆண் ஒருவரிடமிருந்து இரண்டு லட்சம் ரூபா பணத்தை பெற்றுக் கொள்ள கடல்கம நகருக்கு வந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் வீட்டில் இருந்து 50 கடவுச்சீட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஈரான் ஜனாதிபதி விஜயத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடு முன்னெடுப்பு

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர் என அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியிருந்தார்.

உமா ஓயா பல்நோக்கு திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஈரான் ஜனாதிபதி நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ரஹிம் ரைசியின் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இலங்கை அரசாங்கத்துடன் ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன என இலங்கைக்கான ஈரான் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் தெரிவித்துள்ளார்.



# முதல் மூன்று மாதங்களில் அரச வருமானம் அதிகரிப்பு

2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்தை விட அதிக வருமானத்தை ஈட்ட முடிந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் நாட்டின் பிரதான வருமானம் ஈட்டக்கூடிய இலங்கை சுங்கம் மற்றும் கலால் வரி திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக 834 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விட 6 வீதம் வருமான அதிகரிப்பாக காணப்படுகின்றது.

அத்துடன், 2024 ஆம் ஆண்டிற்குள் 4,106 பில்லியன் ரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



# கடிதங்கள் அனுப்பாமல் நேரடியாக வாருங்கள்!

## அனுர குமாரவிற்கு சஜித் அழைப்பு

ஐக்கிய மக்கள் சக்தி தலைவருடனான விவாதத்திற்கு திகதியை அறிவிக்கும் வகையில், தேசிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் இரவு ஐக்கிய மக்கள் சக்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

சஜித் பிரேமதாஸவிற்கும் அனுர குமார திஸநாயக்கவிற்கும் இடையில் விவாதத்தை நடத்த முடியுமான சில தினங்களை தேசிய மக்கள் சக்தி அதில் குறிப்பிட்டுள்ளது.

மே 07, 09, 13 அல்லது 14 ஆம் திகதிகளில் இந்த விவாதத்தை நடத்த முடியும் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

திகதியை தீர்மானித்த பின்னர் நேரம், எவ்வளவு நேரம் விவாதம் நடத்துவது, இடம் மற்றும் ஒளிபரப்புச் செய்யும் அலைவரிசையை தீர்மானிக்க முடியும் என தேசிய மக்கள் சக்தியின் இந்த விவாதம் தொடர்பிலான இணைப்பாளர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸவின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தி இந்த விவாதத்திற்கு இணங்கவில்லையென்றால், அது தொடர்பில் விரைவில் அறிவிக்குமாறும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வீரகெட்டியவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தேசிய மக்கள் சக்தியின் அழைப்பிற்கு சஜித் பிரேமதாஸ பதிலளித்தார்.

கடிதம் எழுத வேண்டிய தேவையில்லை எனவும் மே மாதத்தில் இரண்டு விவாதங்களுக்கும் தாம் தயார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

பொருளாதார வல்லுநர்கள் மற்றும் தலைவர்களுக்கு இடையிலான இரண்டு விவாதங்களுக்கும் தாம் தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதிலிருந்து தப்பி ஓடாமல், இரண்டு சவால்களையும் ஏற்றுக்கொள்ளுமாறும், கோழைகளாக தப்பித்து ஓடாது, விவாதத்திற்கு வருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

பொருளாதார குழுவினருக்கிடையிலான விவாதத்திற்கு அச்சமா எனவும் போதிய அறிவு இல்லையா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே, கடிதம் அனுப்பாமல் மே மாதம் இரு விவாதங்களுக்கும் வருமாறு எதிர்கட்சித் தலைவர் தேசிய மக்கள் சக்தியினரை அழைத்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.04.2024

## மேஷம்

நீங்கள் நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும். வீட்டை புனரமைத்தல் பற்றி இருவரும் கலந்தலோசிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.சிறந்த வகையில் சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம் தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது.

## மிதுனம்

நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டிற்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதற்றத்துக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.

## கடகம்

உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தை மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

## கன்னி

உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீக சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.

## துலாம்

இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.

## விருச்சிகம்

தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவர்க்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு அதிர்ஷ்டம் காரணமாக ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.04.2024




இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living


OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park



# பட்டதாரிகளை ஆசிரியர்களை இணைக்க அடுத்த வாரத்தில் நேர்முகப் பரீட்சைகள்

தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை நியமிப்பதற்கான, நேர்முகப் பரீட்சைகளை எதிர்வரும் வாரங்களில் நடத்துவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்காக கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் மே மாதம் 9ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் ஆள் சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சைகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியல் மற்றும் அழைப்புக் கடிதம் என்பன கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வெளிவிவகார அமைச்சின் தூதரக சேவையில் மாற்றம்

வெளிவிவகார அமைச்சின் தூதரக அலுவல்கள் பிரிவு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் பத்தரமுல்லை – சுஹுருபாய நிர்வாக கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

மேற்படி தினத்திலிருந்து, புதிய அலுவலகத்தில் வழமையான அலுவலக நேரங்களில் சகல தூதரக சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேநேரம், கொழும்பிலுள்ள தூதரக அலுவல்கள் பிரிவினால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஆவண அத்தாட்சிப்படுத்தல் சேவைகள், எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் காலப்பகுதியினுள் பிராந்திய அலுவலகங்களில் சேவைகளை பெறமுடியுமென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# மாணவர்கள் சுகாதாரம் குறித்து விசேட கவனம் செலுத்துங்கள்!

## பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

நாட்டில், காய்ச்சல், வயிற்றுப்போக்கு மற்றும் டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக பாடசாலை சூழலை தூய்மைப்படுத்துவதற்கு, அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறும் அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கோரியுள்ளார்.



அத்துடன், பாடசாலை மாணவர்களின் சுகாதாரம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்துமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, புத்தாண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் சிறுவர்களிடத்தில, வயிற்றுப்போக்கு மற்றும் இன்ஃப்ளுவென்சா வைரஸ் பரவல் அதிகரித்துள்ளதாக கொழும்பு ரிஜ்வே சிறுவர் சீமாட்டி வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் அவதானமாக இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.